RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21315

# நம்பியகப்பொருள் காட்டும் வாழ்க்கை நெறி

**மு.சென்னப்பன் [அ,*]**

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, தருமபுரி-636705, தமிழ்நாடு, இந்தியா.

# The way of life that shows Nambiyaga Porul

**M. Chennappan [a,*]**

[a] Department of Tamil, Government Arts College, Dharmapuri-636705, Tamil Nadu, India.

* Corresponding Author:
anbiniyanthinai@gmail.com

Received: 15-03-2021
Revised: 30-06-2021
Accepted: 06-07-2021
Published: 26-07-2021

Check for updates

## ABSTRACT

The development of grammatical literature is constantly changing according to the context in which it appears. On that basis, each of the Tamil grammar books records the biographical elements of the people who lived in the respective period. Nambiyaga Porul is the book that expands the internal grammar after the Iraiyanar Kalaviyalurai who gives grammar to the internal subject in the line of grammar. In that sense, the autobiographical grammar of Tholkappiyar grammar and Chandor's literature, which adapts it, expands the internal grammar and sets it up as a story show, showing new developments. The description of the inner branch was first known in this book. Karuporul ettu. He was fourteen. He also mentions the events leading up to the marriage in the area of handwriting and drawing people. The description of the inner branch was first known in this book. The karpiyal nattrai thirteen people were found to have marked the day along with the learner. It is the only object of faith in grammar texts that standardize internal traditions and describe them as fields. Tholkappiyar refers to events only as claims. Theft classification has been categorized as possible up to chastity and has been divided into various claims in 32 fields. Theft and chastity have been categorized and elaborated, and charitable standing has been summarized into seven categories, which have been extensively discussed in two areas, internal and graphical. Beliefs such as the Tholkappiyam have five physical distinctions: introspection, theology, graphics, pedagogy, and annihilation. The grammatical definition of thirukkovaiyar is also interpreted as the concept of intuition. The text is based on the amount, type, and spread. Literary songs such as Thanjai Vanan Kovai songs, Sangam literary songs, Thinaimozhi Iympadhu, Thinaimaalai Nootruiympadhu, thirukkovaiyar have also been taken as evidence songs. It explores lifestyles that show a special optimism with a theatrical style and literary style that arose from the old and new tradition.

**Keywords:** Tholkappiyam, Tamil Grammar, Nambiyaga Porul, Iraiyanar.

## முன்னுரை

உலகியல் வழக்கு, செய்யுள் வழக்கு எனும் இவ்வழக்கின்கண் மொழியினை ஒழுங்குபடுத்தப் பேரறிஞர்கள் தமிழ்மரபிற்கேற்ப வகுத்த நெறிமுறையே இலக்கணமாகும். பேச்சுமொழி எப்பொழுது ஒழுங்கு பெற்றதோ அப்பொழுதே இலக்கணம் தோன்றிவிட்டது என கருதலாம். ஆக, “ஒரு மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் உதவுவது இலக்கணம்” என்ற பொதுவான கூற்று மெய்பிக்கின்றது. (Veluppillai, 2002) எனவே தமிழ் அகப்பொருள் இலக்கணங்களான தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம்,

வீரசோழியம், நம்பியகப்பொருள், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கணவிளக்கம், தொன்னூல்விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் ஆகியவற்றுள் பல அக மரபு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இலக்கண நூல் வரிசையில் அகப்பொருளுக்கு இலக்கணம் கூறும் இறையனார் களவியலுரையை அடுத்து அக இலக்கணத்தை விரித்துக்கூறும் நூலாக இருப்பது நம்பியகப்பொருள் என்னும் நூலாகும். நம்பியகப்பொருள் இலக்கண நூலில், நிகழ்ந்த அகமரபு வளர்ச்சி பற்றி ஆராய்ந்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நம்பியகப்பொருள்

நாற்கவிராச நம்பியரால் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட இலக்கணம். இது "தொல்காப்பியத்தின் அகப்பொருள் இலக்கணத்தையும், சான்றோரின் இலக்கியத்தையும் தழுவி இயற்றப்பட்டது. செப்பமுற விளங்குகிறது. நூற்பாக்கள் எளிமையுடையன; மனப்பாடம் செய்வதற்கு ஏற்றன; வேண்டியாங்கு விரித்துக் கூறப்பெறும் கருத்துக்களை விரிதும், அடுக்கிக் கூற வேண்டியவற்றைச் சுருக்கியும் கூறுகின்றது" என சோம.இளவரசு கூறுவர் (Ilavarasu, 2010). இந்நூல் ஐந்து இயல்களையுடையது. அகத்திணையியல்-116, களவியல்-54, வரைவியல்-29, கற்பியல்-10, ஒழிபியல்-43 என மொத்தம் 252 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. திருக்கோவையாரின் இலக்கண வரைமுறை அகப்பொருண்மைக் கருத்துக்களையும் நம்பியகப்பொருள் விளக்குகிறது. இந்நூல் கிளவிகள், தொகை, வகை, விரி என்கிற அடிப்படையில் அமைந்துள்ளன. தஞ்சைவாணன் கோவைப் பாடல்கள், சங்க இலக்கியப்பாடல்கள், திணைமொழிஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருகோவையார் போன்ற இலக்கியப் பாடல்களும் சான்றுப் பாடல்களாக எடுத்தாளப்பட்டிருக்கின்றன. 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்' என்ற நெறி காலங்காட்டும் வளர்ச்சியில் மாறி இலக்கணம் கண்டதற்கு இலக்கியம் இயம்பும் முயற்சிகள் தோன்றின. இம்முயற்சிகளில் முதல் நூல் தஞ்சைவாணன் கோவையாகும்.

## மரபு

மரபு என்பது நம் முன்னோர்கள் விட்டுச்சென்ற எச்சங்களை காலம் காலமாகக் கடைப்பிடித்து வருபவை. காலச்சூழலுக்கு ஏற்ப சில மாற்றங்களும் நிகழ்வதற்கு வாய்ப்புண்டு. "ஒரு காலத்தில் சமூக வழக்கில் இருந்த ஒரு மரபு, எல்லாக் காலத்திலும் ஏற்கப் பெற்றிருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. கள்ளுண்ணுதல் சங்க கால மரபாக இருந்துள்ளது. ஒரு மரபு பிறிதொரு காலத்தில் வீழ்ச்சியடைந்த பிறகு அது மீண்டும் மறுமலர்ச்சி அடைய வாய்ப்பு உண்டு, அவ்வாறு அது மறுமலர்ச்சி அடையும்போது பண்டைக்கால உருவு இழந்து நடப்புக் காலத்திற்கு ஏற்ப மாற்றம் பெற்றே வழக்கு வரும் அல்லது சமகால சமூகத்தின் ஏற்புரிமை பெற்றே வழக்கு வரும்" என்கிறார் சிலம்பு நா. செல்வராசு (Selvarasu, 1998). மரபு என்பது விதியாக, அறமாக, கட்டுப்பாடாக, கட்டமைப்பாக அமைப்பொழுங்களாகச் சமூகத்தில் நிலவி வருகின்றது. "தொல்காப்பிய மரபியலில் உள்ள 'மரபு' என்ற சொல்லுக்கும் 'நூன்மரபு', 'மொழிமரபு' ஆகியவற்றிலுள்ள மரபு என்ற சொல்லுக்கும் பொருள் வேறுபாடு உண்டு. நன்னூலில் வரும் மரபு, மரபு வழுவமைதி ஆகியன குறிப்பதும் மேலே தொல்காப்பியத்தில் வரும் மரபு என்ற சொல்லும் ஒரு பொருள் தருவன அல்ல" என்று சீனிவாசன் குறிப்பிடுகிறார் (Kumarakuruparan, 2005). இப்பரிமாணங்களில் மரபு என்ற சொல்லாட்சியைப் பல பொருண்மைகளில் தொல்காப்பியர் பயன்படுத்தி இருப்பதைக் கொண்டு மரபின் தொன்மையை உணரமுடிகிறது. முந்தைய தலைமுறை வாழ்வியலோடு தொடர்புடைய வாழ்வியல் எச்சங்கள் தற்கால பயன்பாட்டிற்கு வழங்கும் எதுவும் மரபேயாகும்.

## அகப்பாட்டு உறுப்புகள்

செய்யுள் உறுப்புகளைப் பொதுவாகவே குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். ஆனால் அகப்பாட்டு உறுப்புகள் இவை தான்.

"திணையே கைகோள் கூற்றே கேட்போர்

இடனே காலம் பயனே முன்னம்

மெய்ப்பாடெச்சம் பொருள் வகை துறையென்று

அப்பால் ஆறிரண் டகப்பாட் டுறுப்பே" (Thamizhannal, 2005)

என்று நாற்கவிராச நம்பி வரையறை செய்கிறார்.

## கைக்கிளை, பெருந்திணை

இலக்கணங்களை வரையறை செய்யும் பாங்கு தொல்காப்பியத்தைவிட நம்பியகப்பொருளில் மேலோங்கிக் காணப்படுகின்றன. கைக்கிளை, பெருந்திணை குறிப்பு (தொல்.அகத்.53,54) தொல்காப்பியர் கூறுவதை இவர் கைக்கிளையுடைய தொருதலைக் காமம் (நம்பி.நூ.3) பெருந்திணையென்பது பொருந்தாக்காமம் (நம்பி.நூ.5) என இலக்கணம் வகுக்கிறார் அகக்கைக்கிளை, அகப்பெருந்திணை, அகப்புறக் கைக்கிளை, அகப்புறப் பெருந்திணை எனவும் விரித்துக் காட்டுகின்றார்.

'காமஞ்சால இளமையோள்' எனத் தொல்காப்பியர் கைக்கிளைத் தலைவியைக் கூற, நாற்கவிராச நம்பி 'காமஞ்சான்ற இளையோள்' (ந.அ.நூ.29) எனக் கூறுவதி;னால் அகப்புறக் கைக்கிளைக்கு விளக்கம் முதலில் இந்நூலில்தான் அறியமுடிகிறது. பொருந்தாக்காமத்தை அகத்திணையில் கூறி இதன் விளக்கத்தை ஒழிபியலில் இருவகையாக அகப்பொருட்பெருந்திணை, அகப்புறப் பெருந்திணை என விவரித்துள்ளார். "அகன்றுழிக் கலங்கல், மடற்கூற்று, குறியிடையீடு, தெளிவிடை விலங்கல், வெறிகோள் வகை, உடன்போக்கு, பூப்பியலுரைத்தல், பொய்ச்சூளுரை, தீர்ப்பில் ஊடல், போக்கழுங்கியல்பு, பாசறைப் புலம்பல், பருவ மாறுபடுதல், வன்புறையெதிர்ந்து மொழிதல், அன்புறு மனைவியும்தானும் வனமடைந்து நோற்றல்" (தமிழண்ணல், 2005) ஆகியவை அகப்பொருட் பெருத்திணை ஆகும்;. "மடலேறுதல், விடைதழால், குற்றிசை, குறுங்கலி, சுரநடை, முதுபாலை, தாபதநிலை, தபுதாரநிலை" (Thamizhannal, 2005) ஆகியவை அகப்புறப் பெருந்திணை ஆகும். இவற்றுள் நாற்கவிராசநம்பியார் காட்டிய பெருந்திணைப் பாகுப்பாடுகள் தெளிவிண்மை. இப்பாகுபாட்டைப் "பிழையான இலக்கண வரலாறு" (Manickam, 2009) என்று கூறும் வ.சுப. மாணிக்கம் அவர்களின் கருத்து சிந்தனைக்குரியதாகும்.

## அன்பின் ஐந்திணை

அன்பின் ஐந்திணையை 'அன்புடைக் காமம்' என்பதோடு அதனுடைய முப்பொருள்கள் குறித்த விளக்கமும் தொல்காப்பியரை அடியொற்றியே விளக்கி அதற்குரிய களவியல், வரைவியல், கற்பியல் என துறைகள் வைத்துக் கூறுகின்றார்.

கைகோள்

"அளவில் இன்பத் தைந்திணை மருங்கிற்

களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்" (Thamizhannal, 2005)

என கைகோளுக்குரியதாகக் கூறுகின்றார்.

இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியற்கூட்டம் ஆகியவற்றைத் தொல்காப்பியத்தைப் போல் (தொல்.நூ.487), களவுப்புணர்ச்சியில் வைக்கின்றார். மறைவெளிப்படுதல், தமரிற்பெறுதல் என கற்பிற் புணர்ச்சியில் (தொல்.நூ.488) தொல்காப்பியர் கூற, நம்பியகப்பொருள் குரவரிற்புணர்ச்சி, வாயிற் கூட்டம் இந்த இரண்டும் காட்டுகின்றன. பொருள் அடிப்படையில் மாற்றம் ஏதும் இல்லை.

## களவியல் துறைகள்

களவியலைப் பதினேழு துறைகளாகவும், கற்பியலை ஏழுதுறைகளாகவும், வரைவியலை எட்டுத்துறைகளாகவும் கொண்டு ஒவ்வொரு துறையும் வகை, விரி என்ற நிலையில் இந்நூல் விளக்குகிறது.

"இயற்கைப் புணர்ச்சி, வன்புறை (வற்புறுத்தல்), தெளிவு (தலைவி தலைவனை நம்புதல்), பிரிவுழி மகிழ்ச்சி, பிரிவுழிக் கலங்கல், இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கிமதி உடம்பாடு, பாங்கியிற்கூட்டம்,

பகற்குறி, பகற்குறி இடையிடு, இரவுக்குறி, இரவுக்குறி இடையீடு, வரைவு வேட்கை, வரைவு கடாதல், ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்" (Thamizhannal, 2005) என்பன 17 துறைகள் களவிற்குரிவையாகும்.

## களவுப் பிரிவு

"திருமணத்தில் பெண்ணுக்குப் பரிசம்போடக் காதலன் பிரிந்து பொருள் தேடி வரவேண்டும். இது சிறுபிரிவு. இதற்கு பருவம் வரையறை கிடையாது. வரைவிடைக்காகப் பொருள் தேடிவருவதற்கு பருவம் இரண்டு மாதத்தின் மேல் இருக்ககூடாது" என்கின்றார் (Thamizhannal, 2005).

## கற்பியல் துறைகள்

"கற்பியல், அகவாழ்க்கை முறையே இல்வாழ்க்கை, ஓதற்பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள் வயிற்பிரிவு, பரத்தையிற் பிரிவு" என்பன ஏழு துறைகள் கற்பியலுக்குரியவையாகும் (Thamizhannal, 2005).

## கற்பியல் பிரிவு

"ஓதற், தூது, மன்னர்க்கு உற்றுழி உதவிசெய, பொருள்தேட, காவற்பிரிவு, பரத்தையிற்பிரிவு என ஆறு வகை. அவற்றுள் பரத்தையற்பிரிவு அயல்மனை, அயற்சேரி, புறநகர்" என மூன்று பிரிவுகளாகும் (Thamizhannal, 2005).

### வரைவியல்

"வரைவு மலிதல், அறத்தொடு நிலை, உடன்போக்கு, கற்பொடு புணர்ந்தகவ்வை, மீட்சி, தன்மனை வரைதல், உடன்போக்கு இடையீடு வரைதல்" (Thamizhannal, 2005) போன்றன குறித்துள்ளார்.

அகவாழ்க்கை மரபுகளை வரன்முறைப்படுத்தித் துறைகளாக விளக்கப்பட்டிருக்கும் இலக்கண நூல்களில் நம்பியகப்பொருள் மட்டுமே ஆகும். தொல்காப்பியம் கூற்றுகளாக மட்டுமே நிகழ்ச்சிகளைக் கூறுகின்றது. நம்பியகப்பொருள் களவு, கற்பு வரை இயலாக வகைப்படுத்தி 32 துறைகளில் பல்வேறு கூற்றுகளாக விரித்துக் கூறியுள்ளது.

## மாந்தர்கள்

களவு கற்புக்குத் தொல்காப்பியரைப் போல் (தொல்.நூ.490-491) கூற்றிற்குரியோரைச் சுட்டுகின்றன. கற்பியல் நற்றாய் சேர்த்து பதின்மூன்றுபேர் (நம்பி.நூ.213-214) குறிப்பிடுவதோடு கூற்றுக்கு உரியமையற்றவர்களையும் தொல்காப்பியத்தை (தொல்.நூ.492) அடியொற்றி கூறுகின்றார்.

## கேட்போர்

தொல்காப்பியம் வழுவமைத்தது போல் (தொல்.நூ.501) தலைவி கூற்றிற்குப் புறநடையாக மக்கள் இன்றி திணைப்பொருள்கள் நம்பியகப்பொருள் கூறுகின்றன. அதாவது, தலைவி தன்னோடு பேசுவது போலக் கருதிப் பேசுவாள். "தன் நெஞ்சு, நாணம், அறிவு, ஞாயிறு, திங்கள், மாலைப்பொழுது, புள் (பறவை), மா (விலங்கு), புணரி (கடல்), கானல் (கடற்கரைச்சோலை) உள்ளிட்டனவும், இவை தவிர உப்பங்கழி, நெய்தற்பூ, புன்னை முதலான மரம், தழைபோல்வனவும் தன் பேச்சைக் கேட்பது போலவும், தனக்கு அவை இனிய ஆறுதல் பகர்வன போலவும் தான் ஏவியதை அவை செய்தமை போலவும் தம்மை அவை தேற்றுவது போலவும் தலைவி கூற்று அமையும்" (Thamizhannal, 2005). இஃது உளவியல் சார்ந்தது. இதைக் காமம் மிக்க கழிபடர்கிளவி எனவும் கூறுவர். இதனால் மனச்சுமை குறையும்; ஆறுதல் கிடைக்கும். "தலைவன், தலைவி, பார்ப்பான், பாங்கன், பாங்கி, செவிலி, கண்டோர் பாணன், கூத்தர், விறலி, பரத்தை, அறிவர், நற்றாய்" (தமிழண்ணல், 2005) முதலாகிய பதின்மூவரும் யாரொடும் பேசாது தம்மொடு தாமே கூறியும் அமைவர்.

## அகப்பொருள் விளக்கத்தில் காணலாகும் புதிய செய்திகள்

"உரைப்போர் கேட்போர் இல்லாமல் புலவன் கூறும் கவியே துறையாகும். அதாவது அகமரபுக்கும் கூற்றுக்கும் அல்லாத புதியதாக ஒருவர் கூறும் கூற்றாகும்" (தமிழண்ணல், 2005). இவர் காலத்தில் துறையின் பொருண்மையில் திரிபு ஏற்பட்டுள்ளதை அறியலாம். அதாவது துறை என்பது கூற்று நிகழிடத்தைக் குறிக்கவில்லை என்கிறார்; தி.வசந்தாள். எனவே, தொல்காப்பியர் கூற்றுமுறையில் அக இலக்கணங்களைக் கூறவும், இவர் அக்கூற்றுக்களைத் தொகுத்துக் கதை நிகழ்ச்சிபோல அமைத்து, கிளவித்தொகை, வகை, விரி என முப்பிரிவாக வகுத்துரைத்திருப்பது புதியதாகும்.

"ஊடலைப் போக்குகின்ற வாயில்களாகப் பார்ப்பனர், பாங்கர், சூத்திரர், பாங்கர் என இருவகைப் பாங்கர், காமக்கிழத்தி, காதற்புதல்வன் ஆற்றாமை" ஆகியோர் தொல்காப்பியர் குறிப்பிடாத வாயில்கள், தொல்காப்பியர் தாயை வாயில்களில் வைத்துக்காட்டுவர் (தொல்.நூ.197) நாற்கவிராச நம்பி தாயைப் பற்றி கூறவில்லை. அக இலக்கணத்தில் நுட்பமான துறைகளில் ஒன்று அறத்தொடு நிற்றல் என்கிற துறை. களவைக் கற்பாக மாற்றுவதற்கான முயற்சியாகும். தொல்காப்பியம் அறத்தொடு நிற்றல் பற்றி விளக்கமாகக் கூறவில்லை. இரத்தினச் சுருக்கமாக 'புரைதீர் கிளவி' என்கிறது. அறத்தொடு நிற்கும் மரபு ஏழு வகைப்படும் என்பதனை (தொல்.பொரு.நூ.203) கூறுகின்றார். இவ்வேழு வகைகளையும் தொகுத்து இருவகையுள் அடக்குவர். அகத்திணை இயல் (நம்பி.நூ.47-54) வரைவியலில் (நம்பி.நூ.175-179) ஆகிய 13 நூற்பாக்களில் விரிவான தகவல்களைத் தருகின்றார் நாற்கவிராசநம்பி.

அறத்தொடு நிற்றல், நிகழுமிடம், நிற்றற்குரியார், நிற்கும்நெறி, தலைவி, பாங்கி, செவிலி, நற்றாய் ஆகியோர் அறத்தொடு நிற்றல் திறம் உடன்போக்கில் அறத்தொடு நிற்றற்குரியார் யார் யார்? அறத்தொடு நிற்றலின் வகை, அதன் விரி ஆகியவை விரிவாகக் கூறுவதினால் அகப்பொருள் வளர்ச்சிக்குத் தக்கதொரு சான்றாகும்.

தொல்காப்பியர் கற்புக்கும் களவிற்கும் பிரிவுகள் குறிப்பிட்டாரேயன்றி அவற்றை வகைப்படுத்திக் கூறவில்லை. ஆனால் பல நூற்பாவில் அவை பற்றிய செய்திகள் (நம்பி.நூ.62) நூற்பாவில் களவுக்குரிய பிரிவுகளை வகைப்படுத்திக் கூறியிருக்கின்றார்.

## முடிவுரை

நம்பியகப்பொருளுக்கு இலக்கிய நூலாகத் தோன்றியது தஞ்சை வாணன் கோவை என்பது அறியலாயிற்று. தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளைப் பொதுவாகக் கூறியுள்ளார். நாற்கவிராச நம்பி அகப்பாட்டு உறுப்புகளாக ஒழிபியலில் வைத்துள்ளதை அறியமுடிந்தது. அகப்புறக் கைக்கிளைக்கு விளக்கம் முதன் முதலாக இந்நூலின்தான் காணமுடிந்தது. பெருந்திணைப் பாகுப்பாடுகள் தெளிவாக இல்லை என்பதனை உணரமுடிந்தன.

கற்பிற்புணர்ச்சியில் தொல்காப்பியர் மறைவெளிப்படுதல், தமரிற்பெறுதல் என்பர். நம்பியார் குரவரிற்புணர்ச்சி, வாயிற் கூட்டம் என்பர். ஆனால் பொருள் அடிப்படையில் மாற்றம் இல்லை பரத்தையிற் பிரிவு மூன்றாகப் பிரித்துள்ளார். கைக்கோள் கூற்றுக்குரியோர் பதின்பேர் என்பர். கற்பில் நற்றாய் சேர்த்து பதின்மூன்று பேர் என்று குறிப்பிட்டுள்ளார். அகக்கூற்றுகளைத் தொகுத்துக் கதை நிகழ்ச்சிப்போல் அமைத்து, கிளவித்தொகை, வகை, விரி, என மூன்று பிரிவாக வகுத்து உரைத்திருப்பது புதியதாகும்.

தொல்காப்பியர் தாயை வாயில்களில் வைப்பார். இவர் தாயைப் பற்றிக் கூறவில்லை. ஊடலைப் போக்குகின்ற வாயில்களாகப் பார்ப்பன், பாங்கர், சூத்திரர் இருவகை பாங்கர், காமக்கிழத்தி, காதற்புதல்வன் ஆகியோர் ஊடலைப் போக்குகின்ற வாயில்கள் ஆவார். அறத்தொடு நிற்றலை ஏழு வகைகளையும் தொகுத்து அகத்திணை, வரைவியல் என்ற பகுதியில் விரிவாகப் பேசியுள்ளார்.

களவு, கற்புக்குரிய பிரிவுகளை வகைப்படுத்தி விரிவாகக் கூறியுள்ளதையும் அறியமுடிந்தன. தொல்காப்பியம் போன்று இயல் பாகுபாடுகள் உடையது. பழைய, புதிய மரபு கொண்டு எழுந்த ஒரு நாடகப்பாங்கோடும், இலக்கிய நயத்தோடும் விளங்கும் சிறப்புக்குரிய நம்பியகப்பொருள் இலக்கண மரபு வளர்ச்சியில் நிகழ்ந்துள்ள அக மரபு மாற்றங்கள் குறித்துத் தெளிவாக ஆராயப்பட்டுள்ளன. எனவே, இந்நூல்

மேற்குறிப்பிட்ட அகவாழ்க்கை மரபு வளர்ச்சியடையப் பல காலங்கள் தேவைப்படினும், இத்தகையதொரு முழுமையான வளர்ச்சியை அடையப் பிறிதொரு இலக்கண நூல் இருந்திருக்கிலாம். அது மறைந்துபோனதால் அந்த இலக்கண நூலுக்கு இலக்கியமாக அமைந்த திருக்கோவையாரை வழி நூலாகக் கொண்டு நாற்கவிராசநம்பி இத்தகைய அக இலக்கண நூலை வரையறுத்திருக்கலாம் என்கிற கருத்தும் நிலவுகிறது.

பண்படுத்தப்பட்ட சமூகத்தின் ஒழுக்கநெறி சார்ந்த விளைச்சலே இலக்கணம். அது இலக்கணம் நூல் இயற்றியோரின் அறிவுத்திறத்தை மட்டும் வெளிப்படுத்துவன அல்ல. பல சமூக மாற்றங்களையும், அச்சூழலில் வாழும் மக்களின் வாழ்வாதாரங்களையும், பழக்க வழக்கங்களையும், நாகரிகப் பண்பாட்டையும், வரலாற்றுத் தரவுகளையும் எடுத்து இயம்பக் கூடியதாக அமைகின்றன.

திணை மரபை அடியொற்றி எழுதப்பட்டுள்ள பொருளிலக்கண நூல்கள் பெரும்பாலும் வேறுபாடின்றி ஒரு நூல் ஒரு பகுப்பின்கீழ்க் கூறிய அகம், புறம் சார்ந்த சில கருத்துக்களை மற்ற இலக்கண நூல்களில் கால மாற்றத்திற்கேற்ப மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதையும் அறிய முடிந்தன.

## References

Ilavarasu, S., (2010) Ilakkana Varalaru, Meyyappan Pathippakam, 2nd Edition, chennai, India.

Kumarakuruparan, (2015) Tamilarin Kalavu - Marapum Pathivum, Madurai Kamaraj University, India.

Manickam, Va Suba., (2009) Tamilkadhal, Sree Indhu Publications, Chennai, India.

Selvarasu, S.N., (1998) Sanga Ilakkiyam Maruvaasippu Samuga Manudaviyal Aayvukal, kavya pathippakam, Chennai, India.

Thamizhannal, (2005) Nambiyaga Porul, 1st edition Meenakshi Puthaka Nilayam, Madurai, India.

Velupillai, A., (2002) Tamil Varalatru Ilakkanam, Kumaran Book House, Chennai, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License